முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 577**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**28.04.2021**, புதன்கிழமை

1. சத்சித்து ஆனந்த சற்குருவே
சரவண ஜோதிஏற்றி உலகமக்களுக்கு
சித்தியும் ஞானமும் அருளும்தவசியே
சிவராஜயோகியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு ஞானஅறிவுரைஆசி
அருளுவேன் சுப்ரமணியர் யானும்இனிதே
வரங்களென பிலவ தகர்திங்களில்
வல்லமைபட அரங்கனுக்கு எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன்ஞானம் உலகமெல்லாம்பரவி
உலகோர்க்கு அழியாமை என்கின்ற சக்திதந்து
குறைவின்றி மக்களை தேற்றி இனிதே
குருபரன் என்ஞான ஆட்சிக்கு வழிவகுக்கும்
4. வகுக்கவே வல்லமையான தர்மம் வளர்த்துவரும்
வள்ளல் ஞானி அரங்கன் உண்மை நெறியே
தளர்வின்றி உலக மக்கள் தொடர்ந்துவருக
தவராஜன் குடிலை அலங்கரித்து உலகோர் இருக்க
5. இருக்கவே இந்தப்பேருலகம் சடுதிமாற்றம் கண்டு
இனிதே ஞானயுகம் ஆகும்
கருத்தாக முருகப்பெருமான் என்வழிபாடு பெருக
கலியுகம் தானாக மாற்றம்பெறும்
6. மாற்றம்தந்து காக்கும் மாதவசி அரங்கன்
மக்களின் சக்தியாக இந்தஉலகில் இருக்க
ஆற்றல்பட அரங்கனை அறிந்தால் உணர்ந்தால்
அரங்கன் தர்மத்தில் இணைந்தால் போதும்
7. போதுமப்பா இந்தஉலகம் சடுதிமாறும்
புண்ணிய லோகமாகி இனிதே
பூதலமெங்கும் அரங்கன் நாமஜெபமோடு
புகலுவேன் ஞானஆட்சி உதயமாகும்
8. ஆகவே தொடர்ந்து அரங்கன் காட்டும்
தூயவழிகளில் வழிவழி மக்கள்வர
தயவுபட உலகோர்க்கு நல்லசக்தியும்
தண்டாயுதன் என்ஞானமும் கீர்த்தியும் வந்தடைந்து புகழ்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.